மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ), (இ) & (உ) இராமேஸ்வரத்துக்கு அப்பால் இந்தியக் கடல் எல்லைப் பகுதிகளில் இலங்கை கப்பற்படையைச் சேர்ந்த படகுகளில் வந்தவர்கள் இந்திய மீனவர்களுக்குத் தொல்லை கொடுத்ததாக, 1968 அக்டோபரில் அரசுக்கு அறிவிக்கப்பட்டது. இவ்வரசு முறையீடு செய்துகொண்டதன் பேரில், இந்திய அரசு, அத்தகைய நிகழ்ச்சிகள் மீண்டும் ஏற்படா வண்ணம் கவனித்துக் கொள்வதற்காக இலங்கை அரசுடன் இது குறித்துக் கடிதத் தொடர்பு மேற்கொண்டுள்ளது.

THIRU D. SANTOSHAM : Is it the responsibility of the Central Government or the State Government to prevent these unauthorised intrusions?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மத்திய சர்க்காருடைய கடமை அது. மத்திய சர்க்காருக்கு இந்த அரசு இத்தகைய நிலைமைகள் ஏற்படும்போது எடுத்துக் கூறுகிறார்கள். மத்திய அரசு தான் இலங்கை அரசோடு தொடர்பு கொண்டு இந்த மாதிரி சம்பவங்கள் ஏற்படாமல் இருக்கும்படி கேட்டுக்கொள்கிறது.

Plastic beads in Milo bag

* 305 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether plastic beads were found mixed with the Milo sold in the fair price shops of North Arcot district; and

(*b*) if so, the reason therefor?

மைலோ மூட்டையில் பிளாஸ்டிக் மணிகள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் நியாய விலைக் கடைகளில் விற்கப்பட்ட மைலோவில் பிளாஸ்டிக் மணிகள் கலந்திருந்தனவா ?

(இ) ஆமெனில், அதற்குக் காரணம் யாது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ), (இ) பங்கீடு அட்டை வைத்துள்ளவர்களுக்கு விற்பனை செய்வதற்காக நியாய விலைக் கடை வணிகர் திரு. சிதம்பரம், 1968-ம் வருடம் அக்டோபர் மாதம் 29-ம் தேதி காலை மைலோ மூட்டை ஒன்றைப் பிரித்தார். அதில் தானிய அளவுள்ள பிளாஸ்டிக் மணிகள் இருப்பதை கண்டார். 1968-ம் வருடம் அக்டோபர் மாதம் 30-ம் தேதி அன்று மறுபடியும் இன்னுமொரு மைலோ மூட்டையைப் பிரித்தபொழுது, அதிலும் பிளாஸ்டிக் மணிகளைக் கண்டார். மீதியுள்ள மூட்டைகளும் உடனடியாகச் சோதனை செய்யப்பட்டன. ஆனால், பிளாஸ்டிக் மணிகள் எதும் அவற்றில் காணப்படவில்லை. மற்ற கடைகளில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த மைலோ மூட்டைகளிலும் பிளாஸ்டிக் மணிகள் இருக்கின்றனவா என்று பார்ப்பதற்காக அவைகளும் உடனே பரிசோதிக்கப்பட்டன. அந்த மூட்டைகளில் பிளாஸ்டிக் மணிகள் காணப்படவில்லை. இவற்றை அனுப்பிய இடத்தில் இந்தக் கலப்படம் தற்செயலாய் ஏற்பட்டிருக்கக்கூடும்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : உணவுக் கலப்படம் ஏற்படுவது அதிகமாகிக் கொண்டு வருகிறது. அரசு தீவிரமாக இதைத் தடுப்பதற்காக அப்படிப்பட்ட குற்றங்களுக்குக் கடுமையான தண்டனையைக் கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இத்தகைய கலப்படம் செய்கிறவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். இந்த மைலோவை மத்திய சர்க்கார் Food

[31st March 1969

கார்ப்பரேஷனுக்கு அனுப்புகிறார்கள். நாம் அங்கிருந்து பெறுகிறோம். இரண்டு மூட்டைகள்தான் இந்தக் கலப்படம் உள்ளதாகத் தெரிகிறது. மற்ற மூட்டைகள் இப்படி இருக்கின்றனவா என்று பார்க்கப்பட்டன. வேறு கடைகளில் சோதனை செய்து பார்த்ததில், அம்மாதிரி இல்லை என்று தெரிந்தது. ஆகையால் அது எங்கிருந்து வந்ததோ அங்கேதான் இந்தக் கலப்படம் நடந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது.

Soil Conservation Workers

* 306 *Q.*—THIRU M. AIYASWAMY : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether the Soil Conservation Workers who worked in the Parambikulam–Aliyar Project works will be retrenched after the completion of the above works;

(*b*) whether there is any proposal with the Government to provide alternative employment for them; and

(*c*) if so, the details thereof?

மண்வளப் பாதுகாப்பு ஊழியர்கள்.

திரு. எம். அய்யாசாமி : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டப்பகுதி வேலைகள் நிறைவடைவதின் விளைவாக அப்பகுதியில் பணியாற்றி வந்த மண்வளப் பாதுகாப்பு ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவார்களா ?

(இ) இல்லை எனில், அவர்களுக்கு மாற்று வேலை கொடுப்பதற்கு அரசாங்கத்திடம் ஏதேனும் திட்டம் உள்ளதா ?

(உ) ஆமெனில், விவரங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை.

(இ) அண்டு (உ) பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தின் கீழ் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள மண் வளப்பாதுகாப்புப் பணியாளர்களின் பணி 1972-ம் வருடம் மார்ச் மாதம் 31-ம் தேதி வரையில் தேவைப்படுகிறது. எனவே, அவர்களுக்கு மாற்று வேலைவாய்ப்பளிப்பது பற்றிய வினாவுக்கு இப்போதைக்கு இடமில்லை.

Procurement of paddy

*307 *Q.*—THIRU T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state the measure of paddy to be procured in each acre according to the Paddy Procurement Order?

நெல் கொள்முதல்

திரு. டி. கே. சுப்பையா : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

நெல் கொள்முதல் உத்தரவில் எத்தனை ஏக்கருக்கு எவ்வளவு நெல் கொள்முதல் செய்ய வேண்டும் என உத்தரவிடப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : மண்வளத்தையும் மாசூலையும் பொறுத்து கொள்முதல் மாவட்டத்துக்கு மாவட்டம் வேறுபடும். உள்ளூர் நிலையை அனுசரித்து இந்த விகிதங்களை நிர்ணயிக்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தரப்பட்டுள்ளது. ஒரு ஏக்கருக்கும் அதற்கும் குறைவாகவுள்ள ஒவ்வொரு நில உடமையாளர்களிடமிருந்தும் கொள்முதல் செய்யக்கூடாதென உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.